
**தமிழ் மொழி மற்றும் இலக்கியத்தின்**
**சமகாலத்தன்மை**
**மலர் 4 இதழ் 1, 2023**
**ராமச்சந்திர கல்வி மற்றும் விளையாட்டு அறக்கட்டளை**
**பதிப்பகம் பன்னாட்டுத்தரப்புத்தக எண்: 978819 4845959**
**இணையதளம்: https://restpublisher.com/book-series/ctll/**
**DOI: https://doi.org/10.46632/ctll/4/1/3**



# சங்க இலக்கியத்தில் வழிபாட்டுச் சடங்குகள்

## கோ. இராஜலட்சுமி
**தூய இருதய கலை மற்றும் அறிவியல் கல்லூரி- பேரணி, விழுப்புரம் , தமிழ்நாடு, இந்தியா**
மின்னஞ்சல்: rajalakshmik91887@gmail.com

## 1. முன்னுரை

உலக மக்களின் தொன்மை தோற்றத்தை வெளிப்படுத்தவும் அடுத்ததலை முறைக்கு உணர்த்தவும் இலக்கியமும் அவற்றின் ஆய்வுகளும் முதன்மை செய்கின்றன. இவ்வழியில் சங்க இலக்கியம் பற்றிய ஆய்வுகள் தமிழ்ச் சமூகத்தின் பரிணாம வளர்ச்சியில் பண்பாடு, பாரம்பரியம் என அடுத்தநிலைக்கு எடுத்துச் செல்கிறது. இக்கூற்றினை மெய்ப்பிக்க சங்ககால இலக்கியத்தில் உள்ள சடங்குகள் வாயிலாகத் தற்காலத்தில் தமிழ் இலக்கிய உலகில் ஆய்வுகள் பரவலாக செய்யப்பட்டு வருகின்றன. தமிழர் மிகத்தொன்று தொட்டுதிணை நெறியில் வாழ்ந்வந்துள்ள இடைவிடாத மரபுடையவர்கள்.

அந்த திணைமரபு வழியில் வாழ்வியல் சடங்குகளும், நம்பிக்கைகளும், பழக்கவழக்கங்களும் உள்ளடங்குவனவாகும். ஐந்துதிணைக்கு தனித்தனியான சிறப்புக்கூறுகளும் உண்டு. அவ்வைந்துமே பொதுவான கூறுகளும் உண்டு. இவ்விரண்டும் பிறப்புமுதல் இறப்புவரை என்றுள்ள வாழ்வியல் சார்ந்த சடங்குகள் தவிர தொழில் சார்ந்த சடங்குகள் எனப் பல்வகையில் உணர்த்திநின்றன. இச்சடங்குகள் குறித்து கட்டுரை முற்படுகின்றது.

தொல்தமிழர்களின் மொழி, பண்பாடு, நம்பிக்கைகள், சடங்குகள், உலகப்பார்வைப் போன்றவற்றை அறிவதற்கு எட்டுத்தொகை துணைபுரிகின்றன. சமூகப்பண்பாட்டு வாழ்வின் அடித்தளமாகவும் கையாளப்பட்டுள்ளதைப் போன்றே ஒவ்வொரு நிலத்திற்குரிய தெய்வங்கள் குறித்தும் இலக்கியங்களின் சான்றுகள் உள்ளன.

**"மாயோன் மேய காடுறை உலகமும்**
**சேயோன் மேய மைவறை உலகமும்**
**வேந்தன் மேய தீம்புனல் உலகமும்**
**வருணன் மேய பெருமணல் உலகமும்**
**முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் எனச்**
**சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே"   (தொல்.அகத்திணையில்.5.)**

தொல்காப்பியக்காலத்திற்கு முற்பட்டமக்களின் மரபுகளையும் வழக்கங்களையும் தருவதோடு மரபுகளில் ஏற்படும் மாற்றங்களினால் விளையும் பாதிப்புகளையும் குறிப்பிடத் தவறவில்லை.

பழந்தமிழ்மக்களிடம் தெய்வம் பற்றிய நம்பிக்கைகள் நிறையக் காணப்பட்டது. அதன் விளைவாக வழிபாட்டுச் சடங்குகள் பல தோன்றின. தெய்வங்களை மக்கள் வெறுமனே வழிபடாது. அத்தெய்வங்களை வழிபடும் போது சில சடங்கு முறைளை செய்துவழிபடுவர். தெய்வங்களைப் பெருந்தெய்வங்கள்,

சிறுதெய்வங்கள் என இருவகையாகப் பகுப்பர். இப்பழக்கம் பெருமகளிவல் வழக்கில் இருந்துவருகின்றது.

இவ்விருதெய்வங்களுக்கும் வழிபாட்டு சடங்கானது பெரிதும் மாறுபட்டுக் காணப்படுகின்றன. பெருந்தெய்வம் மற்றும் சிறு தெய்வவழிபாட்டு சடங்கானது பழந்தமிழ் இலக்கியங்களில் காணப்படுகின்றன. தமிழிலக்கியத்தில் முழுமையாக முதன் முதலில் கிடைக்கும் இலக்கண நூலான தொல்காப்பியத்தில் பெருந்தெய்வங்கள் பற்றியகுறிப்புகளும், சிறுதெய்வங்கள் பற்றிய குறிப்புகளும் காணப்படுகின்றன.

டான்யோடர், 'நாட்டுப்புறச்சமயம் என்பது அமைப்புக்குட்படுத்தப்பட்டு, நிறுவனமாக்கப்பட்டுவிட்ட கட்டுப்பாடுகளைக் கொண்ட சமயங்களுக்கு மாறுபாடானது' என்று கூறுகிறார்.

**நாட்டுப்புறத்தெய்வங்களை,**

1. ஊர்த்தெய்வங்கள்
2. இனத்தெய்வங்கள்
3. குலத்தெய்வங்கள்
4. மாலைத்தெய்வங்கள்
5. சமாதித்தெய்வங்கள்
6. துணைத்தெய்வங்கள்

என ஆறுவகையாகப் பகுக்கிறார் டாக்டர் துளசி இராமசாமி.

ரைட்ரெவரெண்ட்கென்ரி நாட்டுப்புறத் தேவதைகளைப் பற்றிய ஒரு நீண்ட பட்டியலைத் தருகிறார். அவற்றை, ஆண்தேவதைகள், பெண்தேவதைகள், கற்கள் என மூன்றாகப் பகுத்துக் காட்டுகிறார்.

## 2. இலக்கியம் வழி அறியப்படும் தொல் தமிழர்களின் இயற்கை வழிபாடு

பண்பாட்டுவளர்ச்சியின் தொடக்கக்காலத்தில் மனிதர்களின் வாழ்க்கை இயற்கையோடு இணைந்தே இருந்துள்ளது. பின்னர் பண்பாட்டு வளர்ச்சியின் பல்வேறு படிநிலைகளின் மனிதர்கள் தங்களை இயற்கையிலிருந்து தனித்துப்பார்க்கும் நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டனர். இயற்கையின் அங்கமாகவே இருந்து வந்த மனிதர்கள் இப்பொழுதுதங்களின் அங்கமாக இயற்கையைப் பாவிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இருப்பினும் பண்பாட்டுவளர்ச்சி என்பது அனைத்துக் குழுவினருக்கும் ஒருமித்தமாக இல்லாதக் காரணத்தால், இன்றும் தொல் குடிமக்கள் இயற்கையோடு இயைந்த வாழ்க்கையைக் கடைப்பிடித்து வருதை அறியமுடிகிறது. தொல்தமிழர்களின் சமூகப்பண்பாட்டு வாழ்க்கையும் இயற்கையோடு இணைந்ததாக இருந்துள்ளது. இதற்குச் சான்றாகச் செவ்விலக்கியங்கள் விளங்குகின்றன. பூமியின் உயிர்த்தொகுதியாக மனிதர்கள், விலங்குகள், தாவரங்கள் விளங்கிய போதிலும் இயற்கையின் பெரும்சக்திகளாக நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் ஆகியவை கருதப்பட்டுள்ளன. இயற்கையின் இச்சக்திகளைப் புரிந்து கொள்வதற்கும் அவைகளால் ஏற்படும் ஆபத்துக்களிலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கும் அவைகளைக் கட்டுப்படுத்துவதற்கும் மேற்கொண்ட முயற்சிகளின் விளைவாக மனிதர்களின் பண்பாட்டுச் சூழலிலும் வளர்ச்சி ஏற்பட்டது.

இயற்கைச் சக்திகள் குறித்ததங்களின் அறிவையும் அனுபவங்களையும் எதிர்வரும் தன்னுடைய சந்ததியினருக்கு எவ்வாறு கொண்டு செல்வது என்று மேற்கொள்ளப்பட்ட முயற்சியின் பயனாகவே சடங்குகளும் வழிபாடுகளும் நம்பிக்கைகளும் தோன்றியிருக்கின்றன. மனிதர்களுக்கும் இயற்கைச்சக்திகளுக்கும்

இடையிலான முரண்பட்ட ஊடாட்டங்கள் இருந்திருக்கின்றன. இயற்கைச் சக்திகளைக் கட்டுப்படுத்த மனிதன் முயன்ற முயற்சிகளின் வெளிப்பாடே மந்திரச்சடங்குகள் என்றால் அது மிகையாகாது இதைப் போன்றே இயற்கைச் சக்திகளும் தன் ஆதிக்கத்தை மனிதன் மீது செலுத்தி வெற்றி காண்பதே இயற்கைப் பேரழிவாக மனிதன் எண்ணினான்.

## 3. சங்க இலக்கியங்களில் வழிபாடு

சங்க இலக்கியங்களில் இயற்கைவழிபாடு பற்றியக் குறிப்புகள் காணப்படுகின்றன. முன்னரே குறிப்பிட்டுள்ளது போன்று, மக்கள் தங்களின் சுற்றுச்சூழலையும் தன்னுடைய ஆற்றலிற்கு அப்பாற்பட்டதாகக் கருதப்பட்ட நிலம், நெருப்பு, காற்று, மழை, ஞாயிறு, விலங்குகள், தாவரங்கள், ஆறுகள், மலைகள் போன்றவற்றை அவைகளின் மீதான பயம் கருதியும் பயன் கருதியும் வழிபட செய்தனர். வழிபடுவதன் மூலம் தனக்கும் அச்சக்திகளுக்குமிடையே நல்லிணக்கத்தை உருவாக்கிட முடியும் என்ற நம்பிக்கை அடிப்படையான காரணமாக இருந்திருக்கலாம். எதற்காக இச்சக்திகளுடன் நல்லிணக்கத்தை உருவாக்கிக் கொள்ள வேண்டும் என்ற கேள்வி எழலாம்.

தன்னைச்சுற்றி நடைபெறும் பல்வேறு நிகழ்வுகளின் காரணத்தை அறியும் அறிவை தொடக்கால மனிதன் பெற்றிருக்கவில்லை என்றுக் கூறுவதை விடமொழியின் வளர்ச்சியற்ற நிலையில் இருந்ததால் காரணத்தைத் தேடுவதில் நேரத்தை செலவிடாமல் பிறசக்திகளுடன் தொடர்புப்படுத்தி புரிந்துகொண்டான். மொழியின் வளர்ச்சியும் பண்பாட்டு வளர்ச்சியும் ஒருங்கே கொண்டு விளங்குகின்ற தற்கால சமூகத்திலும் காரணத்தை அறியும் போக்கில் நம்பிக்கை கலந்திருப்பதை இங்கு மறந்து விடமுடியாது. ஆவிகள், பேய்கள் போன்ற இயற்கை இறந்தச்சக்திகள் இன்றும் மனிதனின் சமூகப்பண்பாட்டு வாழ்வில் முக்கியப் பங்காற்றிருவதை இங்கு நினைவிற் கொள்ள வேண்டும்.

**"விளங்கு பகல் உதவிய பல்கதிர் ஞாயிறு**
**வளங்கெழு மாமலை பயங்கெடத் தெறுதலின்**
**அருவிய யான்ற பெருவரை மருங்கில்**
**சூர்ச்சுனைதுழை இநீர்ப்பயங் காணாது"** **(அகம்.91:1-4)**

அதாவது உலகம் விளங்குவதற்குக் காரணமான பகலினைத் தந்துதவிய ஞாயிறு என்னும் பொருளில் இடம் பெற்றுள்ளது.

## 4. கடவுள் மீது சடங்குகள்

சங்ககால தமிழர்கள் தங்கள் வாழ்வில் நடைபெறும் நல்லது, கெட்டது எல்லாவற்றிக்கும் ஒரு தெய்வீக ஆவி தான் காரணம் என்று நம்பினார்கள். அதை அணங்கு என்று அழைத்தனர். அப்பெண் சக்திதங்களின் தொழிலுக்குக்கெடுதல்கள் செய்வதாகவும், இயற்கைப்பொருள்கள் எல்லாவற்றிலும் அந்த ஆவி இருப்பதால் அக்கண் பார்வைபடாமலிருக்கக் கண்ணேறு சடங்குகளையும், மலை, நீர், பாம்பு, ஆகியவைகளைத் தெய்வமாக வணங்கினர்.

**"குன்றக் குறவன் கடவுள் பேணி**
**இரந்தனன் பெற்ற எல்வளைக் குறுமகள்"** **(ஐங்.257:1-2)**

இயற்கை சக்தி வாய்ந்த மரங்களிலும் தெய்வ ஆவி வசிப்பதாகச் சங்ககால தமிழர்கள் நம்பினர். அவர்கள் ஆல், அரசு, இலஞ்சி, வன்னி, வேம்பு, பழைய தண்ணீர்த் துறைகளையும், ஊரின் நடுவே இருக்கும் மரங்களின் அடியையும், ஊர்பொதுவிடம் அம்பலங்களையும் தெய்வீகசக்தி இருப்பதைச் சங்ககால மன்னர்களும் நம்பினர். ஒரு மரத்தின் துண்டை மட்டும் தனியாக எடுத்து ஊர் பொது இடத்தில் வைத்து வழிபட்டனர். இதுவே பிற்காலத்தில்சி வலிங்க வழிபாடாக மாறியது.

## 5. இறைவனுக்குச் செய்யும் சடங்கு முறைகள்

தனக்கு மேம்பட்ட இறைவனை வழிபடும் வழக்கம் மக்களிடையே உள்ளது. அவ்வாறு வழிபடும் பொழுது இறைவனுக்கு மனிதனைப் போன்றே உணவளித்து வழிபடுகின்றனர். பழந்தமிழர் அரசர்கள் ஆவுதி என்னும் அவிப் பலி உணவைத் தேவர்களுக்கு அளித்து வழிபாடு செய்துள்ளர். இவ்வாறு செய்யும் வழிபாட்டின் பொருட்டு தேவர் உலகத்தில் இருந்து கரும்பைப் பூமிக்குக் கொண்டு வந்ததாக்க் கூறுவதை,

**“அமரர்ப் பேணியும் ஆவுதி அருத்தியும்**
**அரும்பெறல் மரபின் கரும்பு இவண்தந்தும்**
**நீர்அக இருக்கை ஆழிசூட்டிய” (புறம்.99:1-3)**

என்ற அடிகள் விளக்குகின்றன. கடவுக்குச் செய்ய வேண்டிய சடங்கு முறைகளை செய்து அரசர்கள் பூமியை ஆண்டு வந்ததை புறநானூறு கூறுகின்றது. அரசர்கள் தாங்கள் வெற்றி பெறுவதற்காகக் கடவுகளுக்குச் சோற்றினைத் தூவி வழிபாடு செய்யும் வழக்கம் இருந்துள்ளது. இதனை,

**“............................ உரிதினின்**
**காவல் மன்னர் கடைமுகத்து உகுக்கும்**
**போகு பலிவெண் சோறு போலத்**
**தூவவும் வல் லன்” (புறம்.331:10-13)**

என்ற புறநானூறு குறிப்பிடுகின்றது.

கடவுள் வழிபாடுகள் பற்றிய பல தகவல்களைச் சிலப்பதிகாரம் பல அறியச் செய்திகளைத் தருகின்றது. மாலை நேரத்தில் வயதான பெண்கள் கோவில்களிலும், வீடுகளிலும் முல்லைப்பூவை நெல்லோடு சேர்த்து தூவி வணங்கிவந்தனர். நல்ல சொல் ஏதாவது கேட்கிறதா என்றும் எதிர்பார்த்திருப்பார்கள் அப்பொழுது எதிர்பார்ப்போடு இருக்கின்றகன்றிடம் உன் அம்மா வந்து விட்டாள் என்று சொன்னால் அது மற்றவர்களின் பிரச்சினைக்கு நல்ல சொல்லாகர் கருதப்பட்டது. வீட்டுக் கதவுகளிலும் பல முறை நெய் பூசினர். மேலும்,

## 6. இயற்கை வழிபாடு

இயற்கையின் கூறுகளான நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம், மலை, ஞாயிறு, திங்கள் போன்ற இயற்கைப் பொருட்களை வழிபடும் தன்மையினையே இயற்கை வழிபாடாகக் கருதுவர். தொல்காப்பியர் ஞாயிறு, திங்கள், தீச்சுடர் ஆகிய இயற்கையின் முக்கூறுகளை வழிபட்டமையினைப் பாடாண் திணையில்,

**“கொடி நிலைகந் தழிவள்ள என்ற**
**வடுநீங்க சிறப்பின் முதலன மூன்றும்**
**கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே” (தொல்.புறம்.88:1-3)**

எனக் காட்டியுள்ளார், இயற்கையின் கூறுகள் மனித நலத்திற்குப் பயன்பட்டமையினை உணர்ந்த மக்கள் அதன் அருட்பண்பினைப் பாராட்டிப் போற்றி வழிபட்டனர். அதுவே காலப் போக்கில் இலக்கிய மரபாக உருப்பெற்றதனைச் சிலப்பதிகார மங்கலவாழ்த்துப் பாடலில் திங்கள், ஞாயிறு, மாமழை போற்றப்பட்டமை தெளிவுபடுத்தும்.

ஞாயிற்றையும், திங்களையும் பயன்கருதிப் பழந்தமிழர் வழிபட்டமை சங்க இலக்கியங்கள் வழி தெரியவருகின்றது. பழந்தமிழர் ஞாயிற்றினை ஆண் தெய்வமாக வேகருதி வழிபட்டுள்ளனர். இதனை,

**“குணகடல் இவர்ந்துகுரூ உக்கதிர் பரப்பிப்**
**பகல்கெழு செல்வன் குடமலை மறையப்**
**புலம்பு வந்திறுத்த புன்கண் மாலை” (நற்.215:1-3)**

என்னும் நற்றிணைப் பாடலில் ‘பகல்கெழு செல்வன்’ என்றும்,

**“பகல்செய் பல்கதிர்ப் பகுதியஞ் செல்வன்**
**அகல் வாய் வானத்தாழி போழ்ந்தென**

**நீரறவறந்த நிரம்பா நீளிடை" (அகம்.229:1-3)**

என்னும் அகநானூற்றுப் பாடலில் 'பருதியஞ்செல்வன்' என்றும் குறிக்கப்பட்டுள்ளமை உணர்த்துகின்றது.

## 7. இறைவழிபாடு

இயற்கை வழிபாட்டின் அடிப்படையில் தோன்றிய இறைவழிபாடு காலப்போக்கில் பலதெய்வ வணக்கத்திற்குக் காணாமாயிற்று. பலதெய்வவழிபாடு வளர்ச்சியுற்ற நிலையில் சிறுதெய்வம், பெருந்தெய்வம் என்ற பாகுபாடும் தோன்றிற்று, இதனை,

**"பானிறவுரு விற்பனைக் கொடி யோனும்**
**நீனிற வுருவினேமி யோனு மென்**
**றிருபெருந் தெய்வமு முடனின் றாஅங்கு" (புறம்.58:14-16)**

என வரும் புறநானூற்றுப் பாடலில் பலராமனையும் திருமாலையும் இரு பெருந்தெய்வமாகச் சுட்டியுள்ளமை தெளிவு படுத்துகின்றது. சிறுதெய்வங்கள் வழிபாடும் வழக்கம் இருந்ததை மன்றம் (குறு.87), பொதியில் (புற.52), கள்ளி (புற.260), பெண்ணை (நற்.303) ஆகியவற்றில் வீற்றிருந்த கடவுளரை வழுத்திச் சென்றமையை அறிய முடிகின்றது.

கடவுகளுக்குப் படைத்தல் என்பது கடவுகளுக்குச் சில பொருட்களைக் கொடுப்பதாக நிச்சயித்துப் படைத்தல் ஆகும். குறுந்தொகையில் குறவன் தன் புனத்தில் முதலில் விளைந்த தினைக்கதிரைக் கடவுகளுக்குப் படைப்பதாக உறுதிக் கொண்டிருந்த நிலையில் அதனை அங்கு வந்த மயில் உண்டு வெறியாடிய தாகக்காட்டப்பட்டுள்ளது. இதனை,

**"புனவன் றுடவைப் பொன்போற் சிறுதினைக்**
**கடியுண் கடவுட் கிட்ட செழுங்குரல்**
**அறியா துண்ட மஞ்ஞை யாடுமகள்**
**வெறியுறு வனப்பின் வெய்துற்ற நடுங்கும்" (குறுந்.105:1-4)**

என்ற குறுந்தொகைப் பாடல்வழி அறியலாம். இங்கு மயிலோடு தொடர்புடைய செய்தி கற்பனை என்றாலும் அக்கற்பனைக்கு அடிப்படையான கடவுகளுக்குப் படைத்தல் என்ற நம்பிக்கையினைக் கருத்தில் கொள்ள வேண்டும். இந்நம்பிக்கையின் எச்சங்களைக் கிராமப் புற மக்களின் வாழ்க்கையில் காண முடிகின்றது. அவர்கள் தங்களது நிலத்தில் விளைந்த முதற் பலனைக் கடவுகளுக்குப் படைக்கும் முகத்தான் கோயிலுக்குக் கொடுத்து விடுகின்றனர், புதிய தானியங்களைக் கடவுளுக்குப் படைத்த பின்னரே உண்ணும் வழக்கத்தினைக் கொண்டிருந்தனர். இதனை அவர்கள் புதியது படைத்தல் என்றழைக்கின்றர்.

## 8. முடிவுரை

மனித வாழ்வின் உறுதிப்பாட்டிற்கு உறுதுணையாக நிற்பது நம்பிக்கைகளே எனலாம். நம்பிக்கைகள் உளவியல் சார்ந்ததாகவே எனலாம். நம்பிக்கைகள் உளவியல் சார்ந்ததாகவே அமைகின்றன. நம்பிக்கை என்பது ஒரு பொருளின் உண்மைத் தன்மையையும் நம்பகத் தன்மையையும் மனம் ஏற்றுக்கொள்ளுதலாகும். அறிவு, அச்சம், சந்தேகம் ஆகியன நம்பிக்கையேடு தொடர்புடையன. மனித அனபவங்கள், உய்த்துணரும் ஆற்றல் ஆகியனவற்றைப் பொறுத்து அதன் தொடர்புகளும் உறவுகளும் அமையும். ஆதலால் நம்பிக்கையை உளவியல் சார்ந்து என்றே கொள்ள வேண்டியுள்ளது.

இறைவனிடம் கொண்டுள்ள அச்ச உணர்வும், இயற்கையின் அதீத செயற்பாட்டினால் ஏற்படுகின்றமழை, இடி, மின்னல், பூகம்பம் பற்றிய தீயவிளைவுகளும், மரணத்தைப் பற்றிய அச்சமுமே நம்பிக்கைகள் தோன்றக் காரணங்களாகின்றன. பிறப்பு முதல் இறப்பு வரை பண்பாட்டிற்கு ஏற்ப பலதரப்பட்ட நம்பிக்கைகளைத் தமிழக மக்கள் நடைமுறையில் கடைப்பிடித்து வருகின்றனர் என்பது இலக்கியங்களின் வழி அறிய முடிகின்றது.

# குறிப்புகள்


[1]. ரவிச்சந்திரன், and கு. "உத்தியாக்கள் சடங்குகள் தொடர்பான இனவரைவியல் ஆய்வு." (2020).

[2]. Parameshwari, T. "இறப்புச் சடங்குகள் உணர்த்தும் தமிழகப் பௌத்தக் கூறுகள்: Funerary Customs Practised in Tamil Buddhist." *Journal of Valartamil* 1, no. 2 (2020): 122-134.

[3]. Kanchana, N. "Tamiḻar vaḻipāṭṭuc caṭaṅkukaḷ [Rituals of Tamils in worshiping]." *Muallim Journal of Social Sciences and Humanities* (2021): 135-142.

[4]. Sivagnanavathy, S. "சடங்குகள் ஊடாக வெளிப்படுத்தப்படும் மொழிப் பயன்பாடும் தற்காலத்தில் அவற்றின் போக்கும்–இந்து சமுதாயத்தை அடிப்படையாகக் கொண்ட நோக்குநிலை." (2022).

[5]. சுபராஜ், ந., ஆரணி, and கே. "இந்துக்களின் வழிபாட்டு மரபில் ஆண்தெய்வங்களும் குலக்குறியமும்: மட்டக்களப்பு மாவட்டத்தினை மையப்படுத்திய ஆய்வு." (2022).